69—

விபத்து இல்லாமல் பேருந்துகளை ஓட்டுதல் மற்றும் பராமரித்தல் பற்றிய பயிற்சி முகாம்கள் அமைத்தல்.

*9146—திரு. செ. து. வரதராஜன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விபத்து இல்லாமல் பேருந்துகளை ஓட்டுவது, பற்றியும், பராமரிப்பது குறித்தும் பேருந்து ஓட்டுநர் நடத்துனர்கட்கு சிறப்புப் பயிற்சி அளிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எல்லா போக்குவரத்துக் கழகங்களிலும் இதுபோன்ற பயிற்சி முகாம்கள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும் ஓட்டுநர் நடத்துனர்கட்கு விபத்தின்றி பேருந்துகள் ஓட்டுவது பற்றியும் பராமரிப்பது பற்றியும் சிறப்புப் பயிற்சி ஏற்கனவே அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிக வேகமாகச் சென்று விபத்து நடைபெறுவதைத் தடுக்க, இதற்கு முன்பு எலக்ட்ரானிக் மீட்டர் பொருத்தப்பட்டிருந்தது. அந்த வண்டிகளில் பொருத்தினால் டிரைவர்களுக்கு, மிக வேகமாக செல்லுகிற வண்டிகளுக்கு ஒரு கட்டுப்பாடு இருக்கும், விபத்தைத் தடுப்பதற்கும் ஏதுவாக இருக்கும். அது மட்டும் அல்லாமல் அந்த விபத்துக்கள் எப்படி எல்லாம் நடைபெறுகிறது. அதனை எப்படியெல்லாம் தடுக்க வேண்டும் என்பதைப் பார்த்து, பரிசீலிக்க ஒரு பயிற்சி முறையை ஒவ்வொரு மாநிலத்திலும் ஆரம்பித்து வைத்தால் நடத்துநர்களுக்கும், டிரைவர்களுக்கும் அது உறுதுணையாக இருக்கும். அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1993 பிப்ரவரி 12]

முற்பகல் 10.30

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எலக்டிரானிக் மீட்டர் வைத்து ஒரே வேகத்திலே அந்தப் பேருந்துகளை இயக்க வேண்டும் என்று அரசு முதலில் முடிவு எடுத்து செயல் பட்டபோது, சீரான முறையிலே அந்த வேகத் தடையின் காரணமாக நல்ல பாதைகளில் வேகமாகச் செல்ல முடியாத காரணத்தால் அந்த வேகத்தை ஈடுகட்டமுடியவில்லை என்கிற காரணத்தினால் அரசு பரிசீலித்து அதை அப்புறப் படுத்தியிருக்கிறது. நீங்கள் குறிப்பிட்டதைப் போல வாகனங்கள் எப்படி செல்ல வேண்டும்; எந்தெந்த வழிகளிலே எப்படிப் பேருந்துகளை இயக்க வேண்டும் என்பதற்காக ஆண்டுதோறும் ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திலேயும் ஓட்டுநர், நடத்துநர் அத்துணை பேர் களுக்கும் தேவையான பயிற்சிகளை இந்தத்துறை நடத்திக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விபத்துக்கள் இல்லாமல் மிகச் சிறந்த முறையிலே வண்டிகளை ஓட்டுகிற ஓட்டுநர்களுக்கும் நடத்துநர் களுக்கும் பரிசுகள் அளிக்கின்ற திட்டம் அரசிடம் உள்ளதா? விபத் துக்களைத் தடுக்க முயலாமல் தவறான முறையிலே விபத் துகளை செய்கின்றவர்களுக்குத் தண்டனை வழங்க கண் காணிப்புத் திட்டங்கள் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல விபத்துக்கள் இல்லாமல் ஓராண்டு முழுவதுமாக சிறப்பாக ஓட்டுபவர்களுக்கு 100 ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. அவர்கள் சிறப்பான முறையிலே இரண்டாவது ஆண்டும் விபத்துக் களைத் தவிர்த்து ஓட்டினால் 125-லிருந்து 175 ரூபாய் வரை வழங்கப்படுகிறது. மூன்றாவது ஆண்டும் விபத்துக்கள் இல்லாமல் சிறப்பான முறையிலே ஓட்டுபவர்களுக்கு 150-லிருந்து ரூபாய் 200 வரை அவர்களுக்கு வழங்கப் படுகிறது. நான்காவது ஆண்டும் விபத்துக்கள் இல்லாமல் ஓட்டுபவர்களுக்கு 175-லிருந்து ரூபாய் 225 வரையிலும் வெகுமதியாக வழங்கப்படுகிறது. 5 ஆண்டுகள் சீராக விபத்துக்கள் இல்லாமல் ஓட்டுபவர்களுக்கு 200 ரூபாயி லிருந்து 250 ரூபாய் வரை வழங்கப்படுகிறது. அதே போல ஓட்டுநர், நடத்துநர்களுக்கு சிறப்புப்பயிற்சி அளிக்கப் படுவதோடு, 'கொஞ்சம் நில்லுங்கள்' என்ற திரை படம்கூட வீடியோ மூலமாகக் காட்டப்படுகிறது.

நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் வந்ததற்குப் பிறகு நல்ல முறையிலே இந்தத் துறை இயகுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. கு. சீனிவாசன்

திரு. ஆ. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புப் பயிற்சி அளித்து அதன் மூலமாக விபத்துக்களைத் தடுக்கலாம் என்று மேற்கொண்ட முயற்சி நமக்கு மிக மகிழ்ச்சி அளிக்கிறது. தமிழகத்திலே சில சாலைகள் மிகக் குறுகலாகவும், வளைவாகவும் மிகவும் பழுதுபட்டும் இருக்கின்றன. எந்த சாலைகளை அகலப்படுத்த வேண்டும் என்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் பரிந்துரை செய்கிறார்களே, அந்த சாலைகளை முன் உரிமை கொடுத்து சரி செய்தாலேயே பெரிய விபத்துக் களைத் தடுப்பதற்குப் பெரும் வாய்ப்பாக இருக்கும் என்பதை அரசு உணர்ந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ.செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்ன யோசனை நல்ல யோசனைதான். ஆனால் அந்த சாலைகளின் சில இடங்களில் ஆக்கிரமிப்புகள் இருக்கின்றன. சென்னையிலிருந்து செங்கல்பட்டுவரை செல்லும் சாலையை, ஈஸ்ட்கோஸ்ட் ரோடு என்ற வகையில் பொதுப்பணித் துறை வேலைகளை மேற்கொண்டாலும்கூட ஏதோ ஒரு காரணத்தை வைத்து தடை வாங்கி விடுகிறார்கள். அந்தத் தடையை அகற்றிவிட்டால் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் சொல்லுகிற சாலையை சீர் செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 70 திரு தே. ஜனார்தனன் மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்.

70—

குறிஞ்சிப்பாடியில் தயாரிக்கப்படும் லுங்கிகள், பட்டுப் புடவைகளை கோ-ஆப் டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்து ஏற்றுமதி செய்தல்

*9870 திரு. தே. ஜனார்தனன் :

மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS